REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 19உ புதன் (4—9—57) ★ ★ வெளியீடு: ஆவணி 20உ வியாழன் (5—9—57) [இதழ் 70

தமிழகத்திற்கு இதுதான்!

சென்னை மாநிலத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பெரிய தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் மொத்தம் ரூ. 83·75 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாம்; கிராம சிறு தொழில்களுக்காக ரூ. 12·19 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாம்!

சென்னை மாநில அரசாங்கம் வகுத்தத் திட்டங்களுக்கு இந்த் தொகையிலிருந்து மானியமும் கடனும் தரப்பட்டுள்ளதாம்.

மக்கள் சபையில் தி. மு. க. உறுப்பினர் திரு. ஆர். தருமலிங்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு மத்திய அமைச்சர் தேசாய் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

நங்கவரம் அறப்போர் உண்மை நிலை!

தவருன செய்திகளை வெளியிடும் இதழ்களின் மனப்பான்மை என்ன?

துப்பாக்கியால் துளைக்கப்பட்டு வயல்களில் செந்நீர் நிரம்ப விரும்புகின்றனவா?

மிராசுதாரர்கள் பிடிவாதத்தை மூடி மறைப்பானேன்?

அண்ணுவிடம் அதிகாரிகள் தெரிவித்ததென்ன?

(நமது தனி நிருபர்)

விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தாரோ அல்லது அவர்களுக்கு ஆதரவு நல்கும் தி. மு. கழகத் தலைவர்களோ, நங்கவரத்து நெருக்கடியைத் தீர்த்து விவசாயிகள் வாழ வழிவகுக்க முயலுகின்றனரே தவிர, விவசாயிகளைப் பலியிட்டு போராட்டம் நடத்த அலையவில்லை என்பதை, தவருன செய்திகளை வெளியிடும் ஏடுகளும், அந்த ஏடுகள் போல் எண்ணமுடையோரும் உணர வேண்டும்.

நங்கவரத்தில் விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் நடத்துகின்ற அறப்போரின் முழு உருவத்தையும் தெரிந்துகொள்ளாமலோ அல்லது தெரிந்துகொண்டிருந்தும் திரித்துக்கூற வேண்டுமென்ற மனப்போக்காலோ ஆரம்பமுதல் தவருன பொய்ச் செய்திகளை வெளியிட்டு 'தினமணி', 'மித்திரன்' ஏடுகள் திருப்தியடைகின்றன.

அமைதியான முறையில் முதல் நாள் துவங்கிய அறப்போர் பிசுபிசுத்தது என்று முதலில் எழுதின.

உழவர்கள் தாங்கள் வெளியேற்றப்படும் நிலத்தில் இறங்கி பழமைபோல் சாகுபடி செய்ய முயலுவதே அறப்போரின் திட்டம்.

அதைப் புரிந்துகொள்ளாமல் மேற்கண்ட ஏடுகள், 'பிசுபிசுத்தது' என்று எழுதின.

அந்த ஏடுகள் விரும்புவது, அறப்போரில் அமைதியின்மை ஏற்பட்டு, உழவர்கள் துப்பாக்கியால் துளைக்கப்பட்டு, வயல்களில் செந்நீர் நிரம்ப வேண்டும் என்பது போலும்!

அடுத்து, 3—9—57-ல், வெளிவந்த 'தினமணி', 'மித்திரன்' ஏடுகளில், 'நங்கவரம் சமரசத்தை தி. மு. கழகத் தலைவர்கள் தலையிட்டு முறித்துவிட்டார்கள்' என்ற அபாண்டமான செய்தி காணப்படுகிறது. மேற்படி தகவலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு. கருணநிதியும், திருச்சி மாவட்டச் செயலாளர் அம்பில் தர்மலிங்கமும், விவசாயிகள் முன்னேற்ற சங்கத் தலைவர்களான குளித்தலை முத்துகிருஷ்ணன், கவுண்டம்பட்டி முத்து ஆகியோரும் பலமாக மறுத்திருக்கிருர்கள்.

தோழர் கருணநிதி, 'மித்திரன்' ஆசிரியர் குழுவிற்கு, தவருன செய்தி வெளியிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, உடனடியாக அறிவிப்பு செய்துள்ளார். அவர்களும் செய்தி அனுப்பியவரை விசாரிப்பதாகக் கூறியுள்ளனர்.

உண்மையில் நங்கவரத்தில் நடப்பது என்ன?

உழவர்கள், தாங்கள் முன்பு பாடுபட்ட நிலத்தில் இறங்கி வேலை செய்கிருர்கள்; அவர்களைப் போலீசார் வெளியேற்றுகிருர்கள்; சிலரைக் கைது செய்கிருர்கள்; சிலரைத் தொலைவில் கொண்டுபோய் விட்டு வருகிருர்கள்; பலர்மீது வழக்குகள் பதிவு செய்திருக்கிருர்கள்.

அறப்போர் ஆரம்பமாவதற்கு முன்பிருந்தே சமரசம் காணுவதில் விவசாயிகள் முன்னேற்ற சங்கத்தார் அக்கறை காட்டினர். அறப்போருக்கு முதல் நாள் இரவுகூட மாவட்ட அதிகாரிகளை அண்ணு அவர்கள் சந்தித்தார். அதிகாரிகள், அண்ணுவிடம் மிராசுதார்களின் பிடிவாத மனப்பான்மையை வெளியிட்டு, சமரசம் காணமுடியாமற் போனதற்கு வருத்தம் தெரிவித்தனர்.

தோழர்கள் மு. கருணநிதி, தர்மலிங்கம், சங்கத் தலைவர்கள் அதிகாரிகளுடன் பலமுறை சமரசப் பேச்சில் கலந்துகொண்டும், மிராசுதார்களின் பிடிவாதத்தாலேயே பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டிருக்கின்றன.

'தினமணி, 'மித்திரனில்'ல் திரு. இராமநாத அய்யர் பண்ணையில் 192 ஏகரில் 56 ஏகர் சொந்த சாகுபடிக்குப் போக மீதியை மாட்டு வாரமாகச் செய்ய ஒத்துக்கொண்டதாகவும் போராட்டத் தலைவர்கள் அதை மறுத்துவிட்டதாகவும் செய்தி காணப்படுகிறது. சொந்தச் சாகுபடியான கரும்பு சாகுபடிக்கு 56 ஏகர் போக மீதியை அறுபது விவசாயிகளுக்கு தலைக்கு ஒரு ஏகரோ ஒன்றரை ஏகரோ குத்தகையாகத் தருவதாகவும், மீதியை மாட்டு ஏர் வாரமாக ஆக்குவதாகவும் பண்ணையார் ஒத்துக் கொண்டால் அதை சங்கத்தார் மறுப்பதற்கே இல்லை.

ஆனல் பண்ணையார் உழவர்களுக்குத் தருகிற குத்தகை, மாட்டு ஏர் வார நிலங்கள், முன்பு உழுத நிலமல்லாது, மூலைக்கு ஒன்ருகத்தான் தரமுடியும் என்று பிடிவாதம் செய்து வருகிருர்.

அதுமட்டுமல்ல; நங்கவரத்தில் இராமநாத அய்யருக்கு 192 ஏகர் மட்டுமல்ல; அதேபோல இராமநாத அய்யர் பண்ணை ஒன்றுமட்டுமல்ல! எல்லாப் பண்ணைகளிலும், எல்லா நிலத்திலுமுள்ள தகராறுகள் தீர்க்கப்பட்டு, முன்னுள்போல் விவசாயி சாகுபடி செய்ய உரிமை தரப்படவேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படுமானல் அறப்போர் முடிவு பெற்றுவிடும்.

4—9—57 மாலையில் பண்ணை

(4-ம் பக்கம் பார்க்க)

'இந்தியரும் நாங்களும் கலாசாரத்தில் என்றும் இரு துருவங்கள்'

'நாகர் நாடு தனிச் சுதந்திர நாடாகும்'

'தொன்றுதொட்டு சுதந்திரத்துடன் வாழ்ந்த இனத்தவர் நாங்கள்'

'தனித் தேசிய இனமாகவே வாழ விரும்புகிரும்'

'எங்கள் பூமியில் எவருக்கும் ஒரு அங்குல நிலமும் சொந்தமில்லை'

நாகர் தலைவர் பிஜோவின் உரிமைக்குரல்

"நாகர்நாடு ஒரு தனி சுதந்தர நாடாகும். அதுஇந்தியாவின் ஆட்சிக்குட்பட்ட ஒரு மாநிலமாக இருப்பதை நாகர்கள் விரும்பவில்லை. நாங்கள் இந்தியாவினின்றும் முற்றிலும் வேறுபட்ட தனித் தேசிய இனமாகவே தொடர்ந்து இருக்க விரும்புகிரும். இதுவே எங்கள் அடிப்படைக் கோரிக்கை.

"இந்தியக் குடியுரிமையை ஏற்க நாங்கள் மறுப்பதன் காரணமாக, இந்தியக் குடியரசுடன் எங்களைப் பலவந்தமாகப் பிணைக்கும் நோக்குடன், இந்திய ஆயுதப்படையினர் கடந்த சில ஆண்டுகளாகவே எங்கள்மீது ஏவிவிடப்பட்டிருக்கின்றனர். அந்த ஆயுதப்படையினர் எங்கள்நாட்டு ஆண்—பெண்—சிறுர் ஆகிய அனைவரையும் எதிர்த்துக் கொடூரச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

"எங்கள் நாட்டில் எந்த ஒரு இந்தியனுக்கும் ஒரு அங்குல நிலமும் சொந்தம் கிடையாது.

"இந்தியாவுக்கும் நாகநாட்டுக்குமிடையே எந்தவித சிக்கலான பிணக்குக்கும் இடமில்லை. சரித்திரம் சம்பந்தப்பட்ட ஆண்டான்—அடிமை முறைக்கான கேள்வியே எழவில்லை. இருநாடுகளுக்குமிடையே பொதுவானதொரு மரபு கிடையாது; கலாச்சாரத்தில்கூட பொதுமை கிடையாது"

இவ்வாறு, நாகர்களின் புரட்சித் தலைவரான பிஜோ என்பவர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தெரிவித்திருக்கிருர்.

அமெரிக்க ஏடான 'நியூயார்க் டைம்ஸ்' 2-ந் தேதி இதழில், பிஜோ எழுதியுள்ள கடிதம் வெளியாகியுள்ளது.

அவர் தன் கடிதத்தில், தன்னை, 'நாகர்களின் தேசிய கவுன்சில் தலைவர்' என்று தெரிவித்து, நாகர்களுக்கான தனிச் சுதந்திர நாடு கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

ஆகஸ்டு 7-ந் தேதியிட்ட அக்கடிதத்தில் 'கோகிமா, இந்தியா' என்று முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் பிஜோ மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

"நாகர் வாழும் பகுதி இந்தியாவின் ஒரு பகுதியாக எப்பொழுதும் இருந்ததுமில்லை; இருக்கவுமில்லை. நாங்கள் புதிதான ஒரு பிரச்சினையைக் கிளப்பி அதற்காகப் போராடவில்லை. தொன்று

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 8/57

திராவிட நாடு விடுதலை வாரம்

செப்டம்பர் 17-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 9-வது ஆண்டு துவக்க நாளான 17—9—1957-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும் கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிரும்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை — நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்தி நாட்டுப் பிரிவினைக்கான கருத்து விளக்கம் தருவதுடன், கழகப் போராட்டங்களில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தக் கேட்டுக்கொள்கிரும்.

அன்பன்,

4—9—57
'அறிவகம்.'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4—9—57 புதன்

என்று விடியும்?

★

36,000 நபர்கள் கோல்லப்பட்டனர்! 20,000 நபர்கள் கைது செய்யப்பட்டனர்!

★

4000 பேர்கள் சேத்து மடிந்தனர்! 10,000 பேர்கள் படுகாயப்பட்டனர்; அல்லது காணுப் பிணமாகினர்!

இது, உள்ளத்தை உருக்கும் செய்தி. உலகத்தவருக்கு ஒரே நேரத்தில் அச்சத்தையும், அதிர்ச்சியையும் தரக்கூடிய செய்தி.

இது, கோரச் சம்பவம்; கொடுமைகள் மலிந்த சோகச் சம்பவம்.

இது, போர்க்களச் செய்தி. மரணத்தின் பிடியில்சிக்கிவிட்ட ஏகாதிபத்தியத்தின் திருவிளையாடலைப் படம் பிடித்துக் காட்டும் பயங்கரச் செய்தி

அல்சீரியா, தனது விடுதலைக்காகச் செலுத்திவரும் காணிக்கையின் அளவைக் காட்டுவது முதற் செய்தி.

அல்சீரியாவின் அரசியல் உரிமையை மறுப்பதற்காகப் பிரெஞ்சு ஏகாதிபத்தியம், தனது குடிமக்களைப் பலியிட்டு வந்துள்ள அரக்கத்தன்மையைச் சுட்டிக்காட்டுவது பின் செய்தி.

தனது தாயக மீட்சிக்காக, விலைமதிக்கவொண்ணு தங்கள் ஆருயிரை, ஏறத்தாழ 36,000 அல்சீரிய குடிமக்கள் பலியிட்டுள்ளனர்.

தங்களைப் பெற்றெடுத்த பொன்னுட்டினை, புல்லர்தம் இரும்புப் பிடியிலிருந்து விடுவிப்பதற்காக, பிரெஞ்சு ஏகாதிபத்தியப் படையினரை எதிர்த்து, கடும்போர் புரிந்து, கைதிகளாகப் பிடிபட்டு, பிரெஞ்சு சிறையில் தொல்லைகள் அனுபவித்துவருகின்றனர்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் முன்னுள் பலம் தெரியும்; இன்னுள் அதற்குத் துணை செய்துவருகிறவர்களின் நிலையும் தெரியும்—அதே போன்று தங்கள் நிலையும் தெரியும்; தங்களுக்கு எல்லாவகையான உதவியும் புரியும் அரசுஎதுவும் இல்லை என்பதும் தெரியும்—இருந்தாலும் அல்சீரிய மக்கள் எதிரியின் பலம் கண்டு மலைக்கவில்லை; தங்கள் நிலை கண்டு அச்சம் கொள்ளவில்லை.

போர்! போர்! என முழக்கமிடுகின்றனர். தங்கள் உடலிலே மூச்சு உள்ளவரையில் தாயக மண்ணில் எதிரியின் நிழல் தெரிவதைக் காணமாட்டேன்—அதை விரட்டியடித்துக் கப்பலேற்றிவிட்டுத்தான் வேறு பணி பற்றிச் சிந்திப்பேன் எனச் சூளுரைத்தவண்ணம், ஏகாதிபத்தியத்தைச் சித்திரவதை செய்து சிறுகச்சிறுகச் சிரழித்து வருகின்றனர், அல்சீரிய ஆண்மையாளர்கள்.

தாயகத்தின் தளை அறுப்போம்—பிறந்த பொன்னுட்டின் விலங்கொடிப்போம—விரம் காப்போம் — விடுதலை காண்போம் என்ற தூய இலட்சியத்திற்காக, தங்கள் நலத்தைத் திரணமாக மதித்து உதறித்தள்ளி, விடுதலை விரோதிகள் இயற்றும் இன்னல்கள் பலவற்றையும் இன்முகத்துடன் ஏற்று, உயிரைத் தரவேண்டியிருந்தால் உயிரையும் உவப்புடன் அளித்து, அல்சீரிய விடுதலை வீரர்கள் புதிய உரிமை ஏடு எழுதிவருகின்றனர்.

அப்புதிய உரிமை ஏடு, அல்சீரிய மக்களின் செங்குருதியால் தீட்டப்படுகிறது.

அதற்காக 36,000 அல்சீரிய நாட்டு விடுதலைப் படையினர், தங்கள் குருதியை அகமும் முகமும் மலர வழங்கி, இனி ஏற்பட இருக்கும் உலக வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்டுவிட்டனர்.

அல்சீரிய விடுதலையை எதிர்த்து நிற்கும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் சார்பில் போரிடும் படைவீரர்களும், புதிய வரலாறு ஒன்றினை எழுதிடத்தான் செய்கின்றனர். அதையும், தங்கள் செங்குருதியால்தான் அவர்கள் தீட்டிவருகின்றனர்.

செங்குருதியால் இரண்டும் தீட்டப்படுகின்ற காரணத்தினுல் மட்டுமே, இரண்டையும் ஒன்றெனக் கருதத்தான் முடியுமோ?—ஒப்பவைத்து மதிப்பிடத்தான் ஒண்ணுமோ?

ஒன்று விடுதலைப் பணி—மற்றொன்று ஆதிக்கப் பணி.

முன்னையது வெண்ணெய்—பின்னையது சுண்ணும்பு.

உலக மக்கள் குலத்துக்கு விடுதலை வழியை வகுத்துக் காட்டியும, சமத்துவப் பண்பைப் போதித்தும், சகோதரத்துவ உணர்வையூட்டியும் அழியாப் பெருமை தேடிக்கொண்டு புகழ்மணம் வீசி நிற்கும் அதே பிரெஞ்சு வரலாற்றில்தான், அச்சிறந்த வரலாற்றைக் களங்ப்படுத்தும் அல்சீரியாவில் பேயாட்டம் போட்டுவருப பிரெஞ்சு ஆதிக்க வெறிச் செயலும் இடம் பெறப்போகின்றன. என்னே காலத்தின் மாற்றம்!

அல்சீரியாவை அடுத்துள்ள மொராக்கோவிற்கும் டுனீசியாவிற்கும் விடுதலையை வேண்டாவெறுப்பாகவாவது வழங்கிவிட்ட பிறகு, அல்சீரியாவின் அரசியல் அடிமைத்தனத்தைக் கட்டிக் காக்க பிடிவாதம் காட்டிவருவது, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் போக்கில் குறிப்பிடத் தகுந்த இலட்சிய நோக்கு இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. அவ்வடிப்படைக் குழப்பத்திலிருந்து, அவ்வேகாதிபத்தியவாதிகள் உடனடியாக விடுபட்டாக வேண்டும். தங்கள் தாயகத்தின் எதிர்கால நன்மைக்காக, பிரெஞ்சு மக்களின் வருங்கால நல்வாழ்விற்காக, 'அல்சீரியாவிற்கு விடுதலை அளிக்க வேண்டியதுபிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் நீங்காக் கடமையாக இருக்கிறது. அவ்வழியிலதான், அலசீரிய மக்களும், பிரெஞ்சு மக்களும் சிறிதுகாலம் சென்ற பிறகாவது நட்புறவுடன் வாழ்வது என்பது உள்ளடங்கி இருக்கிறது. என்று விடியும்?

பண்டித நேருவின் எதேச்சாதிகாரப் போக்கு!

எதிர்த்தவரே 'ஆமாம் சாமி' போட்டுவிட்டார்!

புதுடில்லி, செப். 3—

அனைத்திந்தியக் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில், திரு. மகாவீர் தியாகி, செயற்குழு உறுப்பினர்களில் 10 பேர்களாவது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தி, ஜனநாயகத்திற்கு அதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டி, காங்கிரஸ் சட்ட திட்டத்தில்தக்கமாற்றம் செய்யவேண்டும் என்று கோரியபோது, பண்டித நேருவோ, வழக்கம்போலவே தம் போக்கை மாற்றிக்கொள்ளாத வகையில், 'செயற்குழு நியமன உறுப்பினர்களைக் கொண்டே இயங்கவேண்டும்' என்று பிடிவாதமாகப் பேசினுராம்.

உடனே மகாவீர் தியாகி, தன் திருத்தத்தைத் திரும்பப் பெற்றுவிட்டாராம்!

கடந்த 30 ஆண்டுகளாக மகாவீர் தியாகியைக் கவர்ந்தவராம் பண்டித நேரு! அதனுல், 'திருத்தத்தைத் திரும்பப் பெறுவதைத் தவிர வேறுவழி இல்லை' என்று தியாகி கூறினுராம்!

இதிலிருந்து காங்கிரஸ் ஜனநாயகம் பற்றியும், பண்டிதரின் உண்மை நிலையைப் பற்றியும் புரிந்துகொள்ள மக்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

'டெலிவிஷன்' நிலையம்

டெல்லியில் நிறுவப்படுமாம்

புதுடில்லி, செப். 3—

1958-ம் ஆண்டில் புதுடில்லியில் ரூ. 5 இலட்சம் செலவில் 'டெலிவிஷன்' நிலயம் ஒன்று ஏற்படுத்தப்படுமாம்.

மத்திய அரசாங்க விளம்பர இலாகா, ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள இதற்கான சாமான்களை வாங்கியுள்ளதாம். இன்னும் ரூ. $1\frac{1}{2}$ இலட்சம் அந்நிய செலாவணியுடன் தேவைப்படும் சாமான்களை வாங்க வேண்டுமாம்.

ஐ. நா. கல்வி—கலாச்சார—சமுதாய நிறுவனத்தின் உதவியுடன் ஆரம்பத்தில் இந்த டெலிவிஷன் நிலயம் இயங்குமாம்.

காலம் மாறிப் போச்சு!

'மதுவிலக்கு கூடாது; உப்புக்கு வரி போடுக'

காங்கிரஸ் தலைவியார் யோசனை

புதுடில்லி, செப். 3—

இந்தியப் பாராளுமன்ற மாநிலங்கள் சபையில் வரவு—செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில், முன்னர் இந்திய சுகாதார அமைச்சராகப் பணியாற்றிய திருமதி இராசகுமாரி அமிர்தகௌரி கலந்துகொண்டு பேசுகையில், மதுவிலக்கு கூடாது என்றும், உப்பு வரியை மீண்டும் அமுல் செய்யவேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்.

"உணவுத் தானியங்களின் விலை உயர்வை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை? பணவீக்கம் காரணமா? அல்லது உணவு இலாகாவின் புள்ளிவிவரங்கள் தவறு? உணவுத்தானியங்களைப் பதுக்கிவைக்கும் சமூகத் துரோகிகள்மீது அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இந்தப் பிரச்சினைகளைப்பற்றி நாம் ஆராயவேண்டும்"

என்றும் அமிர்தகௌரி குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து பேசுகையில், பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் வற்புறுத்திவரும் கொள்கைக்கு மாறாக, மதுவிலக்கு அமுல் நடத்துவதைக் கைவிடவேண்டும் என்றும், உப்பு ீது வரி விதிக்கப்பட வேண்டும் என்றும் தைரியமாகக் குறிப்பிட்டார்.

திருமணத்திற்குத் தனி வரியும், இரண்டு குழந்தைகளுக்கு அதிகமாகப் பெற்றுல் அக்குழந்தைகளுக்குத் தனி வரியும், சுகாதார வரியும் விதிக்கப்படவேண்டும் என்றும், இதனுல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஓரளவு வெற்றிபெற நல்ல வாய்ப்பு ஏற்படும் என்றும், இத்தகைய பரந்த நோக்கத்தில் விதிக்கப்படும் வரித் திட்டங்கள் மக்களுக்கு அதிகப்படியான தொல்லைகளைத் தராது என்றும் கூறியுள்ளார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆதரித்து அவர் பேசுகையில், அந்தத் திட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட வேண்டுமானுல், நாட்டிலுள்ள பல்வேறு பழைய மன்னர்களை இந்திய நிதி அமைச்சர் அணுகி, அவர்களின் வருமானத்தில் ஒரு பகுதியைத் திட்டத்திற்கு நன்கொடையாகப் பெறவேண்டும் என்று கூறினுர்.

அவர்கள் உள்ள மாநிலங்களில் நடைபெறும் திட்டங்களில் ஒரு சிலவற்றை அவர்களின் பொறுப்பில் ஒப்படைத்து, நடைபெறும் நற்காரியத்தில் அவர்களுக்கும் ஒரு பங்கு இருக்கச் செய்வதன் மூலம் நமது பெரிய முயற்சியில் நல்ல பலனைக் காணமுடியும் என்றும், இதேபோன்று பெரிய வியாபாரிகளுக்கும் வாய்ப்பளித்து திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்றும், இதனுல் வரி ஏய்ப்பைத் தடுக்கவும், இலஞ்ச ஊழலைக் குறைக்கவும் கூட வழிபிறக்கும் என்றும் கூறியுள்ளார்.

"இப்போது வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பது நடுத்தர மக்களை அதிகம் பாதிக்கிறது. அவர்கள் வாழமுடியாது திண்டாடுகிறுர்கள். நிதி அமைச்சர் நடுத்தர மக்களுக்கு மேலும் இன்னல்களை உண்டாக்குவது கூடாது" என்றும் அவர் கூறினுர்.

பேச்சின் முடிவில், வரிப் பளுவைத் தாங்கக்கூடியவர்கள்மீது வரி விதிக்கப்படுவதைக் கூடாது என்று தாம் கூறவில்லை என்றும், நிதி அமைச்சர் நேர்மையானவர்களை தொல்லைக்கு உட்படுத்தாமலும், நேர்மையற்றவர்களைவிட்டு வைக்காமல் இருக்கவும், உத்திரவாதம் அளிக்கவேண்டும் என்றும் கூறினுர்.

இலங்கைத் தமிழர்களைப் பற்றி இந்தியாவுக்கு அக்கறையில்லையாம்

பண்டித நேருவின் துரோகப் பேச்சு

புதுடில்லி, செப். 3—

மக்கள் சபையில், வெளிநாட்டுக் கொள்கைமீது பண்டித நேரு ஆற்றிய உரை, 'இந்தியா ஒரே நாடு; எல்லோரும் இந்திய மககள்' என்று இன்னமும் செயற்கை வாதம் புரிந்திடும் தெளிவற்றவர்களுக்கு நல்ல விளக்கம் தருவதுபோல் அமைந்துள்ளது.

இந்திய அரசாங்கம் எவரைப்பற்றி அக்கறை காட்டுகிறது—எவர் நலனுக்காகப் பாடுபடுகிறது என்ற உண்மை பண்டிதரின் இந்தப் பேச்சுமூலம் அறிந்துகொள்ள வாய்ப்பேற்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கொள்கைமீது மக்கள சபையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் பண்டித நேரு இலங்கைவாழ் தமிழர் பற்றியும் பேசியுள்ளார்.

இலங்கையில் உள்ள இந்தியர்களின் பிரச்சினை பற்றி இந்திய அரசாங்கம் சட்டப்படி அக்கறை காட்ட வேண்டியதில்லையாம். அவர்கள் இந்தியக் குடிமக்கள் அல்லவாம்! இந்தியாவின் சரித்திர அடிப்படையில் மட்டுமே அவர்களின் நலனைப் பற்றிக் கவனிக்க வேண்டியுள்ளதாம்!

வியாபார சம்பந்தமாகவும் மற்ற காரியங்களுக்காகவும், தற்காலிகமாக இலங்கைக்குச் சென்ற இந்தியக் குடிமக்களுக்கு, 'விசா' வைப் புதுப்பிக்கவோ, மறுக்கவோ, இலங்கை அரசாங்கத்திற்கு மற்ற நாடுகளுக்கு உள்ளது போலவே உரிமை உண்டாம்!

இத்தகையவர்கள் வெளியேற்றப்படுவது, நிதானமாக—பல கட்டங்களில் நடைபெற வேண்டும் என்று மட்டும் இந்தியா கேட்டுக்கொண்டுள்ளதாம்!

இவைதான் பண்டித நேருவின் உண்மை உள்ளக்கிடக்கை!

தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்கள் — பெருவாரியானவர்கள் வடவர்—பிரச்சினை பற்றி பண்டித நேரு காட்டிய தீவிரமும அக்கறையும, சுறுசுறுப்பும், இலங்கையில் உள்ள இந்தியர்கள்—பெருவாரியானவர் தமிழர்—பிரச்சினையில் காட்டப்படாதது மட்டுமல்ல; கூர்ந்து கவனித்தால் இலங்கைத் தமிழருக்கு இந்திய அரசாங்கம் செய்துவரும் துரோகமும், காட்டிக்கொடுக்கும் அவல நிலையும் புலனுகும்.

பொதுந் தேர்தல்: ஒரு மதிப்பீடு

புதுடில்லி, செப். 3—

மாநில சட்டசபைக்கான 2,517 தொகுதிகளில் மொத்தம் 10,885 பேர் போட்டியிட்டனராம்!

மக்கள் சபைக்கான 399 தொகுதிகளில் 1,592 பேர் போட்டியிட்டனராம்!

இதுவரையில், தேர்தல் முடிவுகளை எதிர்த்து 470 மனுக்கள் வந்துள்ளனவாம்!

நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தல்பற்றி இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மலையாளம் ஆட்சி மொழியாகும்!

கேரள சர்க்கார் நடவடிக்கை

திருவனந்தபுரம், செப். 3—

படிப்படியாக மலையாள மொழியைக் கேரளத்தின் ஆட்சி மொழியாக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

இதற்கான ஆக்க முறைகளை வகுத்துக்கூற ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மலையாள சொற்களைத் திரட்டவும், எந்தக் கட்டத்தில் எந்த முறையில் நிர்வாக நடவடிக்கைகளை மலையாள மயக்குவது, என்று முடிவு செய்யவும், மலையாளச் சுருக்கெழுத்து முறை, கையச்சுப் பொறி (டைப்ரைட்டர்) பற்றி ஆராய்ந்து கூறவும் இந்தக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தக் குழுவில் ஐவர் இடம் பெற்றுள்ளனர்; திரு. அச்சுத மேனன் தலைமையில் குழு செயல்படும்.

‘அறிவு வளர்ச்சியை எவரும் தடை செய்துவிட முடியாது’

சென்னை - புதுவண்ணை பொதுக்கூட்டத்தில் சி. பி. சிற்றரசு, என். சீவரத்தினம்

சென்னை, செப். 2—

சென்னை — புதுவண்ணாரப்பேட்டை அண்ணா படிப்பகத்தின் சார்பில் 24—8—57 மாலை 6-30 மணிக்கு ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் என். சீவரத்தினம் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், ‘மரணப் படுக்கை’யில் உள்ள இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்கு பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, திராவிட நாடு பிரியும் நாள் வெகு தொலைவில் இல்லையென்றார். நமது இயக்கம் பகுத்தறிவை அடிப்படையாகக்கொண்ட அறிவியக்கம் என்றும், அறிவு வளர்ச்சியை எவரும் தடை செய்துவிட முடியாது என்றும், நமக்கெல்லாம் ஊன்றுகோலாக அண்ணா இருக்கிறார் என்றும், அவர் தலைமையிலேயே நாம் திராவிட நாடு பெறுவது உறுதி என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தோழர் சீவரத்தினம் அவர்கள் அவசரமாக வெளியூர் புறப்பட வேண்டியிருந்ததால் அவருக்குப் பதிலாக, தோழர் அன்புரோஸ் அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டு விடைபெற்றுக் கொண்டார்.

தோழர் ஆர். ஜார்ஜ் பேசுகையில், கம்யூனிஸ்டுகளின் பொய்ப் பிரச்சாரங்களையும், இழிசெயல்களையும் கண்டித்தார்.

இடையில், தோழர் டேப்-இராதாமாணிக்கம் இயக்கப் பாடல்கள் பாடி கூட்டத்தினரை மகிழ்வித்தார்.

அதன் பிறகு தோழர் சி. பி சிற்றரசு பேச எழுந்ததும் அவருக்குப் பல சைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் சீனிவாசனின் ஆண் மகவுக்கு ‘செங்குட்டுவன்’ என்றும், தோழர் எஸ். எம். ஏழுமலையின் பெண்மகவுக்கு ‘மணிமேகலை’ என்றும் சிற்றரசு அவர்களால் பெயர் சூட்டப்பட்டது.

சிற்றரசு அவர்களின் நீண்ட உரைக்குப் பின் (பேச்சு பின்னர் வெளிவரும்) நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

இலஞ்ச ஊழல் நடவடிக்கை:

சென்னை, செப். 2—

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளின் மீது 1957 ஜூன் மாதத்தில் ஒரு தலைமைக் கான்ஸ்டபிளின் சம்பளம் குறைக்கப்பட்டது; ஒரு துணை எஞ்சினீயர் சம்பளம் ரூ. 420-லிருந்து ரூ. 380 ஆகக் குறைக்கப்பட்டது; ரெவினியூ இலாகாவைச் சேர்ந்த ஒரு தாசில்தார், கடன் வழங்கும் பிரிவு குமாஸ்தா ஆகியோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

தென் மண்டலத்தில் இன்ஷ்யூர் திட்டம்

ஒரு கண்ணோட்டம்

சென்னை, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய நான்கு மாநிலங்களை ஒன்றாகக் கணக்கிட்டு தென் மண்டல இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

எட்டு வட்டார நிறுவனங்கள் 43 கிளை நிறுவனங்கள், 22 துணை அலுவலகங்கள் 54 மாவட்டங்களில் இயங்கி வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1,000 பரிசோதகர்களும் 50,000 ஏஜெண்டுகளும் உள்ளனராம்.

இந்த ஆண்டில் ரூ. 75 கோடி மதிப்புக்கு இன்ஷ்யூர் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கருதப்பட்டுள்ளது.

1956 செப்டம்பர் முதல் தேதியிலிருந்து 1957 ஆகஸ்டு 26-ந் தேதிவரையில் 2,48,864 திட்டங்கள் ரூ. 64,52,00,040 மதிப்புக்கு பூர்த்தியாகியுள்ளதாம்.

இதைத்தவிர ரூ.45,11,98,989 மதிப்புக்கு 1,66,618 பாலிசி திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டும் வருகிறதாம். விளம்பரத்திற்காக ஒரு பத்திரிகை நடத்தப்படுகிறதாம்.

சனதா திட்டமும், இப்போது சென்னை நகரம், கோவை, ஐதராபாத், குடந்தை, பாபனாசம், மாயவரம், சீர்காழி, காஞ்சிபுரம் ஆகியவில் அமுல் நடத்தப்பட்டுள்ளதாம்.

விரையில் மற்ற மாவட்டங்களுக்கும் ‘சனதா திட்டம்’ விரிவுபடுத்தப்படுமாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வடாற்காடு மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

செப்டம்பர் 21, 22-ந் தேதிகளில்

திருவண்ணாமலையில்

சாமி அரங்கில் நடைபெறும்

★

21—9—’57:

இந்தி எதிர்ப்பு மாநாடு

தலைவர்:

1938-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சர்வாதிகாரியாகப் பணியாற்றிய

சுவாமி அருணகிரிநாதர்

திறப்பாளர்:

சி. வி. எம். அண்ணாமலை

★

22—9—’57:

தி. மு. கழக மாநாடு

தலைவர்:

அன்பில்-தருமலிங்கம்

திறப்பாளர்:

கிருஷ்ணமூர்த்தி பி.ஏ. (ஹானர்ஸ்)

★

அண்ணா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்வர்.

இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு.

கட்டணம்: ரூ. 5, 3, 1.

ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.
மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
செயலாளர்கள்

முல்லை - சத்தி
வரவேற்புக்குழு தலைவர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

புதுவை-முருங்கம்பாக்கம் தி. மு. க. திறப்பு விழா

என். வி. நடராசன், என். சீவரத்தினம் கலந்துகொண்டனர்

1—9—57 மாலை 6 மணிக்கு புதுவை—முருங்கம்பாக்கம் வார்டு தி. மு. கழகக் கிளை துவக்க விழா நடைபெற்றது. வழியெங்கும் தோரணங்கள், வளைவுகள் ஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

புதுவை வட்டத் தி. மு. கழகச் செயலாளர் ச. சிவப்பிரகாசம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

புதுவை வழக்கறிஞர் சு. பெருமாள் கழகக் கொடியின் விளக்கத்தை விவரித்துப் பேசினார்.

தோழர் என். சீவரத்தினம் அவர்கள் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் போக்கினை விவரித்தும், கண்டித்தும், நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தியும் பேசினார்.

இறுதியாகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், தென்னகம் கடந்த 10 ஆண்டுகளாக வடவர் ஆட்சியில் தாழ்ந்து வருவதையும், அதனை எதிர்த்துக் கேட்க ஆற்றலில்லாத தமிழக அமைச்சர்களின் போக்கினையும், நாட்டுப் பிரிவினையை எவ்விதத்திலும் பெற்றுத் தீருவதே கழகத்தின் இலட்சியமென்பதை விளக்கியும், ஆந்திர—தமிழக எல்லைப் பிரச்சினையில் வடநாட்டு ஆதிக்கம் செய்துவரும் பிரித்தாளும் சூழ்ச்சி படாஸ்கர் தீர்ப்பு ஆகியவைகளைப் பற்றியும் விரிவாகப் பேசியதுடன் கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் பிரிவு குறித்தும் குறிப்பிட்டார்.

பின்னர் கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் பிரிவுக்கு வருந்தி கூட்டத் தலைவரால் அனுதாபம் தெரிவிக்கப்பட்டு இரண்டு நிமிட நேரம் அனைவரும் அமைதியாக எழுந்து நின்று இறுதி வணக்கத்தைத் தெரிவித்த பின்னர் கூட்டம் முடிவுற்றது.

‘மக்களின் மன உணர்ச்சியை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்’

‘உபதேசம்போல் பேசுவது வெறும் பைத்தியக்காரத்தனமாகும்’

‘பக்குவமாகச் சொல்லாவிட்டால் பலன்கிடைக்காது’

அனுபவமடைந்த பண்டிதர் அறிவுறுத்துகிறார்

“மக்களிடையே பிரச்சாரம் செய்கையில் அவர்கள் மனதில் என்ன ஏற்படவேண்டுமென்று கருதுகிறோமோ அது ஏற்படும்படி செய்யவேண்டும்; இல்லையானால், காரியம் நடக்காது. ஆனால், மக்களை, ‘நல்லவர்களாக இருங்கள்’ என்று உபதேசம் செய்வதாக இருக்கக் கூடாது; உபதேசம் செய்யப் போனால் அவர்கள் மனதில் கோபம்தான் கிளம்பும்.

“ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் ‘உபதேசம் என்கிற முறையில் இல்லாமல் பக்குவமாகச் சொல்லவேண்டும். ஒவ்வொரு தடவையும் நாம் பேசும் பேச்சு என்ன பலனை உண்டுபண்ணுகிறது என்பதை ஊன்றிக் கவனிக்க வேண்டும். அவர்கள் மன உணர்ச்சியை அறிய முயல வேண்டும். அதை உணராமல் ஏதேதோ பேசினால் அது வெறும் பைத்தியக்காரத்தனமாகவே இருக்கும்; பலன் கிடைக்காது.

“நான் மக்களிடையே பேசும்போது அவர்கள் முகபாவத்தைக் கவனித்து அவர்கள் மன நிலையை உணர்ந்து அதற்கேற்றபடியே பேசுவேன்; என் கருத்தை அவர்கள்மீது சுமத்த விரும்பமாட்டேன்; நான் என் கருத்தைத்தான் தெரிவிக்க முடியும். ஆனால் அதை அவர்கள் ஏற்கக்கூடிய நிலையில் தெரிவிக்க முயல்வேன். சர்க்கார் விஷயமும் இப்படித்தான். மக்களின் மன உணர்ச்சியைத் தெரிந்தே சர்க்கார் செயல் ஆற்றவேண்டும்.”

என்று, பண்டித நேரு, மாநிலங்களின் செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பேசுகையில் கூறியுள்ளார்.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை

தனியார் துறைக்கு அனுமதி

புதுடில்லி, செப். 3—

தென்னாட்டில் சேலம் மாவட்டத்தில் நிறைய மண்கலந்த இரும்பு தாதுக்கள் கிடைக்கின்றன. இதைப் பயன்படுத்திக்கொண்டு சேலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்று மக்கள் மன்றம் கோரிவந்துள்ளது.

தென்னகத்தின் இரும்புச் செல்வத்தை அரசாங்கமே பயன்படுத்திக்கொள்ள முன்வராது தனியார் துறைக்கு ஊக்கமளிக்கும்வகையில் மத்திய அரசாங்கம் செயல்படத் துவங்கியுள்ளது.

ஆண்டுதோறும் 15,000 டன் தேனிரும்பு உற்பத்தி செய்யும் ஒரு திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம். இதற்கு ரூ. 40 இலட்சம் செலவிடவேண்டியிருக்குமாம்.

இதனால் மொத்தம் 200 பேர்களுக்குமட்டுமே வேலை கிடைக்குமாம். இரும்பு எடுப்பதில் 1,000 தொழிலாளர்கள் மட்டுமே ஈடுபடுவார்களாம்.

சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் இரும்புத் தாதுப் பொருள்களில் 35, 40 சதவிகிதம் இரும்பு உள்ளதாம்.

இரும்பைமட்டும் தனியே எடுப்பதற்குத் தேவையான சுண்ணாம்பு ரகமும் ஏராளமாக சேலம் மாவட்டத்திலேயே உள்ளதாம்.

நாட்டில் உள்ள வார்ப்பட சாலைகளுக்கு மொத்தம் 8 இலட்சம் டன் தேனிரும்பு தேவைப்படுகிறதாம். இப்போது இரண்டு இரும்பு எஃகு நிறுவனங்கள் இந்த அளவைத் தயாரித்து வருகிறதாம்.

சேலத்தில் தேனிரும்பு தயாரிக்கப்பட்டதும், அந்த அளவுக்கு ஈடாக எஃகு உற்பத்தி நாட்டில் அதிகரிக்குமாம்.

சென்னைக்குக்கிடைத்தது இரண்டுதான்!

புதுடில்லி, ஆக. 2—

இரண்டாவது திட்ட காலத்தில் மொத்தம் 12 உருக்கு வார்ப்பட தொழிற்சாலைகள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

இவற்றில் 3 அரசாங்கத் துறையில் நிறுவப்படும்; அதில் இரண்டு வடநாட்டிலும், ஒன்று தென்னாட்டிலும், ஏற்படுத்தப்படும்; இதற்காக மொத்தம் ரூ. 3½ கோடி செலவிடப்படுமாம்.

மேற்கு வங்கத்தில் சித்தரஞ்சனிலும், பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ராஞ்சிக்கு அருகில் மற்றொன்றும் மூன்றாவது தொழிற்சாலை தென்னாட்டில் —பெங்களூரிலும் ஏற்படுத்தப்படுமாம்.

தனியார் துறையில் ஏற்படுத்தப்பட இருக்கும் 9 வார்ப்பட சாலைகளில் சென்னையில் இரண்டு மட்டும் பீளமேடு—திருவொற்றியூரில் ஏற்படுத்தலாம் என்று இப்போது கருதுவதாகத் தெரிகிறது.

மலேயாவுக்கு உலகம் தரும் மதிப்பு

கோலாலம்பூர், செப். 3—

ஆகஸ்டு 31-ம் நாள் வெள்ளையர் ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த மலேயா, சுதந்திரம் பெற்றது. இந்தச் சிறு நாடு சுதந்திரம் பெற்றதும் நடைபெற்ற விழாவில் உலக நாடுகள் அனைத்தும் வாழ்த்து வழங்கி, நட்புறவு ஏற்படுத்திக்கொண்டு நல்லாசி கூறியுள்ளன.

மலேயா சுதந்திரம் பெறும் காட்சியைக் காண 16 நாடுகளிலிருந்து 50 அரசாங்கப் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

ஏழு காமன்வெல்த் நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகளும், ஆசிய நாடுகளின் தூதுவர்களும் வந்திருந்தனர்.

மலேயாவின் வெளிநாட்டு விவகாரப் படிப்பகத்திற்குத் தேவைப்படும் புத்தகங்கள், கோலாலம்பூரில் உள்ள கைத்தொழில் நிலையத்திற்குத் தேவைப்படும் நூல்கள், மலேயாவின் புதிய பாராளுமன்றத்திற்குத் தேவையான மரச் சாமான்கள் ஆகியவற்றை அளிக்க கனடா முன்வந்துள்ளது. விழாவில் கனடா அமைச்சர் இந்த நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளார்.

4 இலட்சம் பவுன் மதிப்புள்ள ஆறு டீசல் இரயில் பெட்டிகளை மலேயாவுக்கு அளிப்பதாக ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் அறிவித்துள்ளார்.

நியூஜிலாந்து சார்பில், கொழும்புத் திட்டத்தின்கீழ் 25,000 பவுன் உதவியளிப்பதாக நியூஜிலாந்து வெளிநாட்டு அமைச்சர் விழாவில் தெரிவித்தார்

இந்தித் திணிப்புக்கு டில்லியின் மற்ருேர் தந்திரம்!

பாராளுமன்றக் குழுவினர் ஆராய்வாராம்!

பண்டித பந்தின் வெறிப் பேச்சு

புதுடில்லி, செப். 4—

ஆட்சி மொழிக் குழு (இந்தித் திணிப்புக் குழு) இந்திய அரசாங்கத்திற்கு அளித்துள்ள அறிக்கையைப் பற்றி ஆராய இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படுமென மத்திய உள்நாட்டு அமைச்சர் பந்த் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவின் முடிவுகள் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அறிவிக்கப்படுமாம்; அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சி மொழி பற்றிய இறுதி முடிவுகளைப் பிரகடனப்படுத்துவாராம்.

இந்தக் குழுவின் முடிவுகள் குடியரசுத் தலைவருக்கு அறிவிக்கப்படுவதற்குமுன், அறிக்கையை மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென பிராங்க் அந்தோணி கோரினார். டாக்டர் எ. கிருட்டினசாமி, என். சிவராஜ் உள்பட 5 பாராளுமன்ற உறுப்பினர்கள், குழுவின் முடிவுகளை குடியரசுத் தலைவருக்கு அனுப்பும் அதே நேரத்தில் பாராளுமன்றத்தின் விவாதத்திற்கு வைக்கப்படவேண்டும் என்று கோரினர்.

பந்த் பதில்

"இந்திய அரசியல் சட்டத்தில் உள்ளபடி 344-வது பிரிவின்கீழ் இந்தக் குழு அமைக்கப்படுகிறது; அதன்படி மொத்தம் 20 உறுப்பினர்கள் குழுவில் இடம் பெறுவார்கள்; மேல் சபையிலிருந்தும் இதில் 10 பேர் இடம் பெறுவார்கள். அரசியல் சட்டத்தின்படி இந்தக் குழு, தன் முடிவுகளை இந்திய குடியரசுத் தலைவருக்கு மட்டுமே அறிவிக்கவேண்டியுள்ளது; அரசியல் சட்டத்தைப் புறக்கணிக்கமுடியாது.

"என்றாலும், இந்தச் சபையின் கருத்தையும் அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன். எனவே, அந்தக் குழுவின் முடிவுகள் கிடைத்ததும், இந்தச் சபையில் அது விவாதத்திற்கு வைக்கப்படும். குடியரசுத் தலைவரிடம் இந்த ஏற்பாட்டிற்கு முன் அனுமதியும் பெறப்படும்"

தொடர்ந்து பேசுகையில் பண்டித பந்த் கூறியதாவது :—

"பாராளுமன்றத்தை நான் புறக்கணிக்க விரும்பவில்லை; உண்மையில் நாங்கள் பாராளுமன்றத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியவர்களே; ஆனால் அரசியல் சட்டப்படி இறுதி அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அவை, அதுபற்றி விவாதிக்கும்போது இதை உணர்ந்து, குடியரசுத் தலைவரின் பொறுப்பைப் பாதிக்காதவகையில் நடைபெற வேண்டும்."

இந்தக் குழு தன் முடிவுகளை அறிவிக்க காலவரையறை நிர்ணயிக்கப்படவில்லையாம்!

இந்தக் குழு எத்தகைய முறையில், எந்த அடிப்படையில் அமைக்கப்படும் என்பதை திட்டவட்டமாக பந்த் அறிவிக்காமல், 'நேர்மையான முறையில், கூடுமான வரை எல்லா மொழியினரும் பிரதிநிதித்துவம் பெறும் வகையில் அமைக்கப்படும்' என்று மட்டும் கூறியுள்ளார்.

'நீதி'-காற்றில் பறக்கிறது!

பெங்களூர், ஆக. 31—

பாவாடை, புடவை, மற்றும் பல அழுக்குப்படிந்த ஆடைகள் ஒரு கையில்! தொட்டி, சோப்பு மற்ெருரு கையில்!

இவைகளுடன் 20 வயது இளைஞன் ஒருவன்—அவன் சலவைத் தொழிலில் ஈடுபட்டவனும் அல்ல; கையில் கொண்டுவந்த ஆடைகள் அவன் வீட்டுப் பெண்களுடையதுமல்ல — ஆத்திரத்துடன் மைசூர் அரசாங்கச் செயலாளர் அலுவலகம் நோக்கி விரைந்து வந்தான். அவன் ஆத்திரமடைந்ததற்குத் தக்க காரணமும் உள்ளது.

அவன் மைசூர் அரசாங்கத் துறை 'ஏவலாளன்'. அவனுக்கு அரசாங்கத் துணைச் செயலாளர் வீட்டில் தரப்பட்ட வேலை—அழுக்கேறிய அந்நிய அணங்குகளின் ஆடைகளைச் சுத்தப்படுத்துவது! முதலில், இவ்வேலையைச் செய்ய மறுத்தாலும்; 'வேலையினின்றும் நீக்கிவிடுவேன்' என்று பயமுறுத்தப்படவே, 'நீதி' கிடைக்கும் என்று நம்பி, அலுவலகம் நோக்கி ஓடோடி வந்துள்ளான். அவனுக்குக் கிடைத்தது இது தான்!

வேறு இடத்திற்கு அவன் மாற்றப்பட்டுவிட்டான்!

நங்கவரம் அறப்போர்

வெளியூர் தோழர்களுக்கு:

நங்கவரம் அறப்போரில் கலந்துகொள்வதற்காக வெளி மாவட்டங்களிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஏராளமான தோழர்கள் நேரிலும், கடித மூலமாகவும் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்துள்ளனர். தேவைப்படும்போது அவர்களுக்கு அறிவிக்கப்படும் என்பதோடு, அதுவரை யாரும் புறப்பட்டு வரவேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

டி. வி. முத்துகிருஷ்ணன்,
தலைவர்,
விவசாயிகள் முன்னேற்ற சங்கம்.

கழகக் கூட்டம்

★

நல்லாடை :

கடைத் தெருவில்
5—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பொன். பக்கிரிசாமி
பேசுவோர் :
என். வி. நடராசன்
சி. ஜம்பு

நங்கவரம் அறப்போர் உண்மை நிலை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யார்கள், அதிகாரிகள், விவசாயிகள் முன்னேற்ற சங்கத் தலைவர்கள், மாவட்ட தி. மு. க. செயலாளர் அம்பில் தர்மலிங்கம் ஆகியோர் சமரசப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுகின்றனர்.

இன்று நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் நல்ல முடிவு ஏற்படலாமென்றும், விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பண்ணையார் இணங்கிவரலாம் என்றும் நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

இதற்கிடையே, 'தினமணி' 'மித்திரனி'ல் வெளிவந்த செய்திகள் ஆதாரமற்றவை என்பதையும், அறப்போரில் பெண்கள் போலீசாரைக் கண்டு ஓடினார்கள் என்று செய்தி வந்திருப்பது விஷமத்தனமானது என்பதையும் அறப்போர்த் தலைவர்கள் அறிவிக்கிறார்கள்.

★

நாளை முதல்!

நமது பாராளுமன்ற உறுப்பினர் தோழர் ஆர். தர்மலிங்கம் அவர்கள் மக்கள் சபையில் கேட்ட கேள்விகளும், அளிக்கப்பட்ட பதில்களும் நாளை முதல் (5-9-57) 'நம் நாடு' இதழில் வெளிவரும். (ஆ-ர்.)

இந்தியரும் நாங்களும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொட்டு இருந்துவரும் மனிதகுல வரலாற்றின் அடிப்படையில், எங்கள் தேசீய உரிமையைத் தொடர்ந்து நிலைநாட்டிக்கொள்ளவே நாங்கள் விரும்புகிறேம்.

"நாகர்கள் தூய்மையான ஜனநாயகத்தை அனுபவித்து வருகிருர்கள். எங்கள் நாட்டில் வீடோ, நிலமோ இல்லாத குடும்பத்தை எங்கும் காண முடியாது. அது, சாதிகளற்ற சமுதாயத்தைக் கொண்ட ஒரு நாடாகும். அங்குள்ள மக்கள், பாதுகாப்புக்காக போலீஸ் உதவியையோ, இராணுவ உதவியையோ, நாடுவதில்லை.

"படித்த நாகர்களில் 90 சதவிகிதத்தினர் கிறிஸ்துவர்களாக உள்ளனர்; அவர்களில் பெரும்பாலோர் நல்ல கல்வியறிவைப் பெற்றிருக்கின்றனர்"

கு. ஜானகிராமன்—தேவி

திருமணம்

5-9-57 காலை 8-மணியளவில், சென்னை-சேப்பாக்கம் ஆபீஸ் வெங்கடாசல முதலித் தெரு, எண்-18 இல்லத்தில், பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் தலைமையில் கு. ஜானகிராமன்--தேவி திருமணம் நடைபெறும்; தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், அ. பொ. அரசு, அலமேலு அப்பாதுரை முதலியோர் வாழ்த்துரை வழங்குவர்

குளித்தலை விவசாயிகள் போராட்டம்

திருச்சி நகர தி. மு. கழக ஆதரவு

திருச்சி, செப். 2—

குளித்தலை வட்டார நங்கவரம் விவசாயப் பிரச்சினையில் உடனடியாக சென்னை அரசியலார் தலையிட்டு விசாரித்து நீதி வழங்குமாறு சென்னை அரசாங்கத்தை வற்புறுத்தியும்;

நங்கவரத்தில் நடைபெறும் விவசாயப் போராட்டத்தை ஆதரிப்பதுடன், போராட்டம் தொடர்ந்து நடைபெறுமானல் திருச்சி நகர தி. மு. கழகம் தன்னாலான எல்லாவகையிலும் ஒத்துழைப்புத் தருவது என்றும்;

1—9—57ல் திருச்சி முனிசிபல் சத்திரத்தில் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்ற திருச்சி நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு:

5—9—57 இரவு 9 மணிக்கு மேற்படி கழகச் செயற்குழுக் கூட்டம் கழகக் கட்டடத்தில் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

மணப்பாறை தி. மா. மு. கழகப் பொதுக்கூட்டம்

6—9—57 மாலை 6 மணிக்கு மணப்பாறை பழைய சந்தைத் திடலில் தோழர் கி. கோவிந்தராசன் தலைமையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் தோழர் கி. மனோகரன் சொற்பொழிவாற்றுவார்.

புதுமனை புகுவிழா

5—9—57 காலை 6 மணிக்கு சென்னை, தியாகராய நகர் கோபதி நாராயணசாமி செட்டி சாலையிலுள்ள தோழர் கே. பரமசிவம்--தோழியர் பி. ஆர். சுலோசனு ஆகியோரின் புதிய 'அருணு' இலலத்தில் புதுமனை புகுவிழா நடைபெறும். மாலை 5½ மணிக்கு கண்டசாலா குழுவினரின் இன்னிசையும், 6½ மணிக்கு குமாரி விஜயகுமாரி நடனமும் உண்டு.

'ஹோம்லாண்ட்'

1—9—57 தேதிய 'ஹோம் லாண்ட்' இதழ், சில தவிர்க்க முடியாத காரணங்களால் நிறுத்தப்பட்டு 8—9—57 தேதிய இதழுடன் இணைக்கப்பட்டு வெளிவரும் என்பதை வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேம்.

—நிர்வாகி : 'ஹோம்லாண்ட்'

இந்தியாவில் குருடர்களின் உபயோகத்துக்கான இலக்கியங்கள் அடங்கிய சுமார் 25,500 பொட்டணங்கள் ஆண்டுதோறும் சராசரியாகத் தபால் மூலம் அனுப்பப்படுகின்றன; இவற்றிற்கு தபால் கட்டலங்கள் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிப்பதென தபால்—தந்தி இலாகா முடிவு செய்திருக்கிறது

★★★★★-★★★★-★★★★★★★-★★★★-★★★★★★★★★★★★★★★

கலைவாணர் என். எஸ். கே. அனுதாபக் கூட்டம்

6—9—57 வெள்ளி மாலை 6-மணிக்கு
திருவல்லிக்கேணி கடற்கரையில்

★

பொதுச்செயலாளர்
இரா. நெடுஞ்செழியன்
அவர்கள் தலைமையில்

அண்ணு

அவர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலைவாணரின் நற்பணியைப் பற்றிய புகழுரை வழங்குவார்கள்.

★

மாலை 5-மணிக்கு கலைவாணரின் பாடல்கள்
(இசைத் தட்டு) ஒலிபரப்பப்படும்.

—தி. மு. கழகம் (42-வது வட்டம்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கேரளத்துக்கு ஆந்திர அரிசி

சென்னை நிறுவனத்துடன் ஒப்பந்தமாம்!

திருவனந்தபுரம், செப். 2—

கேரள மாநிலத்தின் தேவைக்கான அரிசியை, சென்னையில் உள்ள ஒரு வாணிப நிறுவனத்தின் மூலம் ஆந்திராவில் கொள்முதல் செய்ய கேரள அரசாங்கம் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளதாம்.

கேரள மக்களின் முக்கிய திருநாளான ஓணம் பண்டிகைக்கு முன்னதாக 5 000 டன் அரிசியை ஆந்திராவிலிருந்து மேற்படி சென்னை வாணிப நிறுவனம் தருவித்துத் தருமாம்.

மற்றும், கேரள மாநிலத்தில் எட்டு இடங்களில் உணவுத் தானியக் கிடங்குகள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

இந்த ஏற்பாடுகளைக் கவனித்துக்கொள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனராம்.

மைசூரில் உள்ள உணவுப் பொருள் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்டு, கேரளத்தில் 'டாப்பியாகா' (மரவள்ளிக்கிழங்கு மூலம் தயாரிக்கப்படும்) அரிசியையும், 'மக்காரோனி' என்னும் ஒருவகைக் கலப்பு உணவுப் பொருளையும் வழங்குவது பற்றி ஆராய்ந்து முடிவு தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்; இது பற்றிய முடிவு தெரிந்த பின்னர் அதற்கான தொழிற்சாலைகளை ஏற்படுத்த கேரள சர்க்கார் முன்வரக்கூடுமாம்.

இத்தகவல்கள் கேரள சட்டசபை கேள்வி நேரத்தின்போது உணவு அமைச்சரால் தரப்பட்டன.

★

திங்கள்தோறும் 2,000 டன் அரிசி தேவையாம்!

டில்லியிடம் வற்புறுத்த உணவு அமைச்சர் செல்கிறார்

கேரள மாநில உணவு அமைச்சர் டில்லி சென்றுள்ளார்.

கேரள மாநில மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய திங்கள் தோறும் 20,000 டன் அரிசி தேவைப்படுகிறதாம்.

ஆனல் செப்டம்பர் முதல், திங்கள்தோறும் 10,000 டன் அரிசி மட்டுமே மத்திய உணவு இலாகா கேரளத்திற்குத் தர இசைந்துள்ளதாம்.

நேரில் சென்று வற்புறுத்தி, திங்கள் தோறும் 20,000; அரிசி கேரளத்திற்குக் கிடைக்கச் செய்யவே, அந்த மாநில உணவு அமைச்சர் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

1,025 பேர் கைது!

சென்னை, செப். 3—

சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டும் என்ற முக்கிய கோரிக்கையுடன் சோஷலிஸ்டுக் கட்சியினர் நடத்திவரும் போராட்டத்தில் இதுவரை மொத்தம் 1,025 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

மறைவு

சென்னை—வண்ணையம்பதி (4-வது வட்டம்) தி. மு. கழகத் தோழர் சி. தெய்வசிகாமணி தந்தையார் சின்னராஜி அவர்கள் 3—9—57 காலை இயற்கையெய்தினர்; அன்று மாலை 6 மணிக்கு சவ அடக்கம் நடந்தேறியது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.